1968 மார்ச் 6]

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: இத்தகைய லாரிகளைப் பறிமுதல் செய்வதற்காகச் சட்டத்தைத் திருத்த இந்த அரசாங்கத்திற்கு ஏதேனும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: அந்தக் கருத்து அரசாங்கத்தினுடைய பரிசீலனையில் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்–விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி* இடப்பட்டிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. ஒற்றிவைப்புத் தீர்மானங்கள்.

(i) ஆந்திர மாநில சட்டப் பேரவையில் தமிழக அரசின் நிர்வாகம் பற்றிய கூற்று.

* திரு. கொ. இர. ஞானசம்பந்தன்: தலைவர் அவர்களே, விதி 42-ன் பிரகாரம் கீழ்க்கண்ட ஒற்றிவைப்புப் பிரேரணையை இந்தச் சபையின் முன் கொண்டு வருகிறேன்:—

"ஆந்திர மாநில சட்டப் பேரவையில் ஆளும் கட்சியைச் சேர்ந்த அங்கத்தினர் ஒருவர் தமிழ் மாநிலத்தில் சட்டமும் அமைதியும் குலைந்து விட்டது எனப் பேசி தமிழக அரசின் நிர்வாகம் பற்றி ஒரு தவறான எண்ணத்தை ஏற்படுத்தியிருக்கிறார்".

இந்த அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினை குறித்து விவாதிக்க சபையின் அலுவல்களை ஒற்றி வைக்க வேண்டுமென்று கோருகிறேன்.

தலைவர் அவர்களே, ஆந்திரத்திலுள்ள காங்கிரஸ் கட்சி உறுப்பினர் நம்முடைய அரசின் நிர்வாகம் பற்றித் தாறுமாறாகச் சட்ட மன்றத்தில் பேசி காங்கிரஸ் அல்லாத அமைச்சரவை மீது தவறான எண்ணம் ஏற்படும் வகையில் பேசியிருக்கிறார். காங்கிரஸ்காரர்கள் இவ்வாறு காங்கிரஸ் அல்லாத அரசைப் பற்றித் திட்டமிட்டு அவதூறாக மேடையிலும், சட்ட மன்றத்திலும் தவறான கருத்தை வெளியிட்டு வருகிறார்கள். அந்த முறையில்தான் ஆந்திர அசெம்பிளியில் பேசியிருப்பதாகக் கருதியிருக்கிறேன. இவ்வாறு பேசுவது மக்கள் மத்தியில் தவறான எண்ணத்தை உண்டாக்க வழி செய்யுமாதலால் நம்முடைய சபையின் நடவடிக்கைகளை ஒத்திவைத்து இது பற்றி விவாதிக்க வழி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே' மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற ஒத்திவைப்புத் பிரேரணை மீது விவாதத்தை நடத்தினால் எந்த அளவுக்கு ஆந்திர சட்ட மன்றத்திலே நடந்திருக்கிறதோ அதே மாதிரி தவறு இங்கும் நடந்து விடுமோ என்று அஞ்ச வேண்டியவர்களாக இருக்கிறோம். அங்கு அவ்வாறு பேசியது எந்த அளவுக்குச் சட்டத்திற்குப் புறம்பானது, நம்முடைய சட்ட மன்றம் பாதிக்கப்படுகிறது என்பதைப் பற்றி ஆராய்ந்து அந்த அரசுக்கு எழுதி விளக்கங்கள் கேட்டுப் பெற்ற பிறகு அந்தப் பிரச்சினை பற்றிப் பேசுவது பொருத்தமாக இருக்கும். சபாநாயகர் அவர்கள் இதைப் பற்றி எழுதி விளக்கங்கள் கேட்டுப் பெறமுடியும். ஆகவே, சபையை ஒத்திவைத்து இதைப்பற்றி விவாதிப்பது இப்போது பொருத்தமாக இருக்காது என்பதால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதைத் திரும்பப் பெற்றுக் கொள்ளும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விதி 50-ன் கீழ் இதற்கு அனுமதி மறுக்கக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

(ii) கச்சத் தீவு திருவிழாவிற்கு தமிழக மக்கள் செல்ல முடியாத நிலை.

திரு. கரு. சீமைச்சாமி : சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவை விதி 42-ன் கீழ் அவையின் இன்றைய நடவடிக்கையை ஒற்றி வைத்து கீழ்க்கண்ட பொருள் பற்றி விவாதிக்க வேண்டும் :—

"இம் மாநிலத்திற்குச் சொந்தமான கச்சத் தீவில் உள்ள அந்தோணியப்பர் மாதா கோவிலில் வருகிற 13-ம் தேதி விழா நடைபெறுகிறது. ஆண்டுதோறும் தமிழகத்தைச் சேர்ந்த மக்கள் படகுகள் மூலம் இவ் விழாவிற்குச் செல்வார்கள். ஆனால் இந்த ஆண்டு அப்படிச் செல்வதற்கு முடியாத நிலை ஏற்பட்டிருப்பது பற்றி விவாதிக்க"

இந்தச் சபையின் நடவடிக்கையை ஒற்றி வைக்க வேண்டுமென்று கோருகிறேன்.

இந்த மாதம் 13-ம் தேதி திருவிழா வர இருக்கிறது. இலங்கை சர்க்கார் கெடுபிடி இருக்கும் காரணத்தால், இலங்கை சர்க்கார் ஒற்றர்கள் வந்து போகிறார்கள் என்ற பீதி ஏற்பட்டிருக்கிற காரணத்தால் அங்கு செல்லுகின்ற மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டு மென்பது பற்றி மாநில சர்க்கார் மத்திய சர்க்காருக்கு எடுத்துரைக்க வேண்டுமென்றும், அது பற்றி இந்தச் சபையை ஒற்றி வைத்து விவாதிக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற ஒற்றி வைப்புத் தீர்மானம் கச்சத் தீவை இலங்கை அரசினர் கைப்பற்றி இருக்கிற சூழ்நிலையைப் பொருத்ததாக இருக்கிறது. இதிலே, அந்நிய நாடு ஆக்கிரமித்து இருக்கும் காரணத்தால் முடிவு கட்டும் முழுப் பொறுப்பும் இந்திய அரசைச் சார்ந்ததாக இருக்கிறது. கச்சத் தீவு தமிழகத்தோடு, இணைந்த ஒன்று என்பதும், இராமநாதபுரம் ராஜாவுக்கு உரிமையுடையதாக இருக்கிறது என்பதும் வரலாற்று முறையில் இருக்கும் குறிப்புகள் ஆகும். இதற்கு முன்னாலேயே வழக்கு ஒன்று ராமநாதபுரம் ராஜாவுக்கும் இலங்கை அரசுக்கும் இடையே ஏற்பட்டு ராமநாதபுரம் ராஜாவுக்குச் சாதகமாகத் தீர்ப்பு வழங்கியிருப்பதாகக் கூறப்படுகிறது. அது சம்பந்தமான ரெக்கார்டுகளைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டு ராமநாதபுரம் ராஜாவும் அதைத் தருவதாக வாக்களித்திருக்கிறார்கள். அதை இந்திய அரசுக்கு அனுப்பி வைப்பதன் மூலம் அவர்கள் தக்க நடவடிக்கை எடுத்து அது தமிழகத்தின் பகுதிதான் என்று நிலைநிறுத்துவதற்கான முயற்சிகளை அரசு எடுத்துக் கொள்ளும். இந்திய அரசு ஒரு கேள்விக்குப் பதில் சொல்லும்போது கூட, இது பற்றித் தமிழக அரசிடமிருந்து விவரங்களைச் சேகரித்துக் கொண்டிருப்பதாகக் கூறியிருக்கிறார்கள். அதைச் சேகரித்து மத்திய அரசுக்கு அனுப்பி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற முறையில் அரசு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழக அரசின் அதிகாரத்திற்கு உட்பட்டு நடவடிக்கை எடுப்பதாகக் கூறியிருப்பதால் உறுப்பினர் அவர்கள் இதை வற்புறுத்தவில்லை என்று கருதுகிறேன்.

திரு. கரு. சீமைச்சாமி : அரசாங்கம் போதிய நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு வருவதாகக் கூறியிருப்பதால் நான் என்னுடைய தீர்மானத்தை வற்புறுத்தவில்லை.

Thiru S. BALASUBRAMANIAN : I want to raise a point o order.